பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஐப்பசி 6 ஜுல்ஹஜ்: 8 இதழ் 252
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-10-77

கோப்பி மோறையு
பாவிக்க
சோயாற்றின்
"சோயாற்றின்" உங்கள்
களைப்பை நீக்குவதோடு
தேக ஆரோக்கியத்தையும்,
நிறைவான புரதச்சத்தையும்
தரவல்லது.
அண்ணா
தொழிலகம்
இணுவில்.
தொலைபேசி: 7412

பரந்தன் ரயில் நிலையத்தில்

# துப்பாக்கி முனையில் பணம் கொள்ளை!

யாழ்ப்பாணம், சனி

பரந்தன் புகையிரத நிலையத்தில் இளைஞர் கோஷ்டியொன்று துப்பாக்கிமுனையில் 16,771 ரூபா 70 சதத்தை கொள்ளையடித்துள்ளது.

5 இளைஞர்களைக்கொண்ட இக்கோஷ்டியினர் கைத்துப்பாக்கி, கத்தியுடன் நேற்று அதிகாலை 2-30 மணிக்கு புகையிரத நிலையத்துக்குள் சென்று அச்சமயம் அங்கிருந்த உதவி புகையிரத நிலைய அதிபர் அலெக்சாந்தரிடம் 'அங்கிருக்கும் முழுப்பணத்தையும் ஒப்படைக்குமாறு கேட்டனராம்.

இரும்புப்பெட்டிச் சாவி அவரிடம்இல்லையென்பதை அறிந்துகொண்ட அக்கோஷ்டியினரில் இருவர் அவரைத் துப்பாக்கி முனையில் காத்துநிற்க மற்றும் மூவரும் புகையிரதநிலைய அதிபர் திரு. நடராசாவின் விடுதிக்கு சென்றதாக மேலும் கூறப்படுகிறது.

விடுதிக்கு சென்ற இளைஞர் கோஷ்டியினர் அவரை எச்சரித்து துப்பாக்கி முனையில் இரும்புப்பெட்டி சாவியைப் பெற்றனரென்றும் இச்சம்பவம்பற்றி மேலும் கூறப்படுகிறது.

சாவியுடன் வந்த இளைஞர்கள் புகையிரத நிலையத்திற்குள் சென்று இரும்புப் பெட்டியை திறந்து ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த முழுப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாகவும் இச்சம்பவம்பற்றிக் கூறப்படுகிறது.

கொள்ளைச் சம்பவத்தின் பின் இளைஞர்கள் தொலைபேசி இணைப்பை அறுத்துவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

கிளிநொச்சி பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. என் அகமட் இச் சம்பவம்பற்றி விசாரணை செய்துவருகின்றார். சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

இக்கொள்ளைச்சம்பவத்தைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பகுதியில் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலுள்ள

# தமிழ் இளைஞர்களுக்கும் கருணை காட்டப்படும்!

## பேரவையில் பிரதமர் உறுதி

(நமது நிருபர்)

வெளிநாடுகளில் தலைமறைவாக இருக்கும் தமிழ் இளைஞர்களை அழைத்து வாருங்கள். அவர்களுக்குக் கருணையுடன் அபயமளிக்கிறேன் என்று பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்றுத் தேசிய அரசப் பேரவையில் உறுதியளித்தார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் புதல்வர் குறித்து ஏற்கனவே தாம் இவ்வாறு ஒரு உறுதிமொழியைக் கொடுத்திருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

நாலாம் மாடிக்குச் சந்தேகநபர்களைப் பொலிஸார் அவசியமின்றி அழைத்துச்செல்லமாட்டார்களென்றும், 'பஜட்' வீதிக் காவல் முகாம் ஒழிக்கப்படுமென்றும் பிரதமர் சொன்னார்.

குற்றவியல் நீதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தை ரத்துச் செய்வது சம்பந்தமான சட்ட மூலத்தின் மீதான விவாதத்தின்போது பிரதம மந்திரி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

ஏப்ரல் கிளர்ச்சிக்காரர்களையும் செலாவணி மோசடி செய்தவர்களையும் தண்டிக்கும்நோக்கத்துடனேயே இந்தச் சட்டம் முன்னைய அரசினால் கொண்டுவரப்பட்டது. பலர் வேண்டுமென்றே குற்றஞ்சாட்டப்பட்டார்கள் என்று கூறிய பிரதமர்சிறையிலிருக்கும்பலரை விடுதலைசெய்வதுபற்றி அமைச்சரவை முடிவுசெய்யவிருக்கின்றது. ஆனால் இறந்துபோனவர்கள் குறித்தும் குற்றப்பணம் அறவிடப்பட்டது குறித்தும் ஒன்றும் செய்யமுடியாது என்றார்.

பிரதமர் பேசிக்கொண்டிருந்தபோது பருத்தித்துறை எம். பீ. திரு. துரைரத்தினம் குறுக்கிட்டு, இந்தச் சட்டத்தினால் தமிழ் இளைஞர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிலர் தலைமறைவாகியுள்ளதாகவும் மற்றும் சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் கூறப்படுறது. இவர்களுக்கும் அரசு கருணைகாட்டுமா என்று கேட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரின் புதல்வரையா குறிப்பிடுகிறீர்கள் என்று கேட்ட பிரதம மந்திரி, அவரைத் தாராளமாக அழைத்துவரும்படி நான் ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவருக்கு உறுதியளித்திருக்கின்றேன் என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு தவறைச்செய்து வருகிறார்கள். இன்னமும் பழைய அரசே பதவியிலிருப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றார் பிரதமர் ஒரு நல்ல அரசாங்கமும், கருணையுள்ள பிரதமமந்திரியும் இருப்பதை அவர்கள் மறந்து பேசுகிறார்கள் என்றார்.

அவர் மேலும்பேசும்போது முன்னையஅரசு பொதுமக்களைப் பழிவாங்கும் விதத்தில் நடந்துகொண்டது. எங்கள் கட்சியை ஆதரித்தார் என்பதற்காக வயோதிபரான முக்தார் என்பவரைக் காவலில் வைத்தது.

நான் ஒருமுறை ஸ்பெயின் நாட்டுக்கு என் மனைவியுடன் புறப்பட்டபோது முன்கூட்டி கட்டணம் செலுத்திப் பெறப்பட விமானப் பிரயாண டிக்கட்டை நான் கள்ளச் சந்தையில் வாங்கியதாகக் கூறி எனது அரசியல்வாழ்வுக்கே உலைவைக்கப் பார்த்தார்கள். டிக்கட்பெற உதவிசெய்த எனது அந்தரங்கச் செயலாளர் திரு. நிகால் வீரத்துங்க காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார் என்று பிரதமர் மேலும் கூறினார்.

இந்தியாவில் திருமதி இந்திரா காந்தியை ஜனதா அரசு கைதுசெய்ததுபோல் இங்கு எவரையும் தமது அரசு கைது செய்யாது என்றும் சொன்னார்.

இந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கமும் கலந்துகொண்டு பேசினார்.

### சங்கிலியன் கோட்டை

கலாசார அமைச்சின் மானியம்மீதான விவாதத்தில் நல்லூர் உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் கலந்துகொண்டு பேசும்போது யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனை சங்கிலிய மன்னனின் கோட்டை போன்ற எஞ்சியுள்ள சின்னங்களைய பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

### மன்னார் எம். பி ஆட்சேபம்

ஒத்திவைப்பு தீர்மானம் மீது மனனார் எம். பீ. திரு. சூசைதாசன் பேசும்போது அரசியல் சட்டத்திருத்த

(6ம் பக்கம் பார்)

## இ. தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மாவட்ட கிளைச்செயலாளர்ளுக்கான கூட்டம் நாளைக் காலை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் 25-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யும் கல்வியமைச்சின் உயர்அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை பற்றியும், பாதிக்கப்பட்ட தமிழாசிரியர் நிலைபற்றியும் ஆராயப்படும்.

## வல்லைபஸ்முதலாளி கொலை எதிரிக்கு 7 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், சனி

வல்வெட்டித்துறை பஸ் முதலாளி கொலைவழக்கு விசாரணை யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று முன்தினம் காலை ஆரம்பமானது.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையில் 1977 ஏப்ரல் 19ந் திகதி சின்னத்தம்பி ஐயாத்துரையைக் கொலைசெய்ததாக சோமசுந்தரம் கணேசலிங்கம் என்ற இளைஞர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினார்.

சட்டத்தரணிகளின்தொகுப்புரை நேற்று முன்தினம் நடைபெற்றது.

சட்டத்தரணிகள் தொகுப்புரை முடிவுற்றதும் நீதிபதி, எதிரி திட்டமிட்டுக் கைமோசக்கொலையைச் செய்துள்ளதால் 7 வருடக் கடூழியச்சிறை விதித்துத் தீர்ப்பளித்தார். (க)

### தேவை

வேப்பம்விதை, ஆமணக்கம்விதை, இலுப்பை விதை, நிலக்கடலை, எள்ளு திருப்தியான விலைக்குக்கொள்வனவு செய்யப்படும். தொடர்புகொள்ளவும்

(B)பொபி இன்டஸ்றீஸ்

சுழாவடி — ஆனைக்கோட்டை

7448

சுன்னாகம்ஸ்கந்தா அதிபரிடம்

## ரூ.34627கொள்ளை

யாழ்ப்பாணம், சனி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதிபரிடமிருந்து 34627 ரூபாவை மூன்று இளைஞர்கள் துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்துக் கொண்டு சென்றுள்ளனர் நேற்றுக்காலை இச்சம்பவம் நடந்துள்ளது.

சுன்னாகம இலங்கை வங்கிக் கிளையில் அதிபரும் வேறு இரு ஆசிரியர்களும் மேற்படி தொகையை எடுத்துக்கொண்டு காரில் புறப்பட்டுச்சென்றார்களாம். கல்லூரிக்கருகில் வைத்து காரை மூன்று இளைஞர்கள் நிறுத்தி துப்பாக்கியை காட்டி அவர்களிடமிருந்தபணத்தை அபகரித்துக்கொண்டு காருடன் சென்றுவிட்டனராம்.

தகவல் கிடைத்ததும் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனாப் எம். ஏ. காதர் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணை நடத்தினர். மாசியபிட்டி என்ற இடத்தில் பின்னர் கார் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பணம் ஆசிரியர்களுக்கான சம்பளம் என்றுதெரிகின்றது.

துப்பாக்கி முனையில்

## பெண்ணை மிரட்டி தாலிக்கொடி ரொக்கம் கொள்ளை

யாழ்ப்பாணம், சனி

வீட்டில் இருந்த குடும்பஸ்திரியை துப்பாக்கி முனையில் மிரட்டி நால்வர் கொண்ட இளைஞர் கோஷ்டி ஒன்று தாலிக்கொடி, ரொக்கம் உட்பட 14,000ரூபா பெறுமதிமிக்க பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றது.

இத்துணிகரச் சம்பவம் சித்தன் கேணியில் நிகழ்ந்தது.

பரமசாமி சண்முகபாலன் என்பவரது வீட்டிலேயே கொள்ளையர் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

சம்பவதினம் இரவு 9-15 மணியளவில் மேற்படி வீட்டுக்குள் றிவோல்வர் சகிதம் நுழைந்த பிரஸ்தாப கோஷ்டி தனித்திருந்த இவரது மனைவியையும் பிள்ளைகளையும் மிரட்டி இக் கொள்ளையை நடத்திவிட்டு இருளோடு இருளாக மறைந்து விட்டதாக பொலிசார் நடத்திய விசாரணைமூலம் தெரியவந்துள்ளது.

சங்கானைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி சப்-இன்ஸ்பெக்டர் திரு. இராசையா தொடர்ந்து தீவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

இதுவரை எவரும் கைதாகவில்லை. (க-உ)

## வரி விளம்பரம்

### தேவை

ரிங்கர், ஸேத்மன், வெல்டர் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும் ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7444

### விற்பனைக்கு

20 ஏக்கர் தென்னந் தோட்டம் 'மா, பலா மரங்கள்சகிதம் ஆறு ஏக்கர் நெற்காணியுடன் சுதந்திரபுரத்தில் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் கொடுக்கப்படும். வேண்டியவர்கள்எதிர்வரும்30-10-77க்கு முன்பு தொடர்புகொள்ளவும். முகவரி: எஸ். லோகேஸ்வரன் சட்டத்தரணி, கொழும்புத்துறை. 7430

சங்கானை – காரைநகர் மெயின் றோட், சாந்தி படமாளிகைக்கு எதிராக உள்ள பிரிக்கப்பட்ட 25 பரப்புப் பனை வளவு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சி. செ. மாரிமுத்து, விற்பனவு ஆணையாளர், 'விதானைவளவு' சித்தன்கேணி. 7393

நல்லநிலையில் உள்ள 22 ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய மேர்சிடெஸ்பென்ஸ் லொறி விற்பனைக்குண்டு. 249, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10-ல் பார்வையிடலாம். 7451

கனகலிங்கம் சுருட்டுகள் தொகையாகவும் சில்லறையாகவும் பஸ் ஸ்ராண்டுக்கு முன்பாயுள்ள P. S. டிஸ்பென்சறியிலும், சட்டநாதன் கொம்பனியிலும் பெற்றுக்கொள்ளலாம். 7471

### தேவை

மீன்பிடி உபகரணங்கள் விற்பனை அனுபவமுள்ள "ஒருவர் தேவை தொடர்புகொள்ளவும். மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், No 16, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 7455

கிளைகளுக்கு முகாமையாளர்கள் உடன் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். முகவரி: பொதுமுகாமையாளர், அருள் பிறதர்ஸ்அன்கோ, பண்டத்தரிப்பு. 7472

### WANTED

Jobs found in Europe. Contact, Pan International Travels, 148/1A. Stanley Road Jaffna 7417

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

நரிக்குண்டு சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடையை 15-11-1977 தொடக்கம் 31-12-1978 வரை குத்தகைக்குவிடுவதற்கு 04-11-1977 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 50/-ம், கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 10/-ம் செலுத்துவதன் மேல் 02-11-1977ம் திகதி புதன்கிழமை பி. ப. 3-00 மணி வரையும் வழங்கப்படும். மேலதிக விபரங்களை மாநகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்,
ஆணையாளர்.
யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்
19-10-1977 7468

திரு. த. சோமசுந்தரம்
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## 1973-ம் ஆண்டின்44ம் இலக்க நீதிநிருவாகச் சட்டம்
## 283-ம் பிரிவின்கீழ் இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்.

விஞசித்தம்பி சோமசுந்தரம் பெண் மனோரஞ்சிதம், புங்குடுதீவு.

காலஞ்சென்றவர்

விஞசித்தம்பி சோமசுந்தரம், இல: 68, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பதாரர்

வலயம்: யாழ்ப்பாணம்
இல: 408

1. சோமசுந்தரம் கேதீஸ்வரன்
2. சோமசுந்தரம் மகள் ஆனந்த கௌரி
3. சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன்
4. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்
5. சோமசுந்தரம் மகள் மனோகௌரி எல்லோரும் இல:68,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
6. பெரியதம்பி முத்தையா இல: 22 ஏ, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1977ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14-ந் திகதியிடப்பட்டதுமான விண்ணபத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் திருப்தி அடைந்ததன் பேரில் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ந் திகதி அல்லது அதற்கு முன்னர் எவராவது எதிர்க்காரணம் காட்டினாலன்றி மேற்சொல்லப்பட்ட மனுதார் காலஞ்சென்றவரின் கணவர் என்ற வகையில் காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைத்தத்துவப் பத்திரங்களைப் பெறுவதற்கு உரித்துடையவர் என்றும், அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படுமென்றும் மேற்சொல்லப்பட்ட பராயமடையாத 1ம், 2ம், 3ம், 4ம், 5ம் பிரதிவாதிகளின் பாதுகாவலராக 6ம் பிரதிவாதி நியமிக்கப்பட்டுள்ளாரென்றும் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளை இடுகிறேன்.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
தத்துவப்பத்திர அதிகாரி.

1977ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ந் திகதி. 7460

## மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
## கேள்வி

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்வரும் பொருட்களின் விற்பனைக்கு கேள்வி கோரப்படுகிறது. கேள்விவைப்புப்பணமாக ரூபா 100/- கட்டிச் சங்கத்தால் வழங்கப்படும் படிவத்தில் நிரப்பி, 10-11-77க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளருக்கு விண்ணப்பிக்கவும்.

900X20 ரயர்கள்
825X20 ரயர்கள்
825X20 ரியூப்புகள்
பறறிகள்
வில்லுத் தகடுகள்

பொதுமுகாமையாளர்
7465 20-10-77

## கேள்விவிளம்பரம்
## கிளிநொச்சிப் பட்டணம் 2ம் இல மாட்டிறைச்சிக் கடை
### கிளிநொச்சிச் சந்தை

9-9-77-ம் திகதிய விளம்பரத்தைப் பார்க்கவும். உரிமைக்காலம் 1-10-77 தொடக்கம் 31-12-77 வரையும் ரெண்டர்ப் பத்திர விநியோகம் 19-10-77 விருந்து 24-10-77 நண்பகல் 12 மணி வரையும் பாரம் ஏற்றல் 24-10-77 பிற்பகல் 3-00 மணி வரை ஆகும்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.
7462

## அதிசய பசுக்கன்று!

கம்பளை, வெள்ளி
ஒருதலை, இரு உடல்களைக் கொண்ட அதிசயமான கன்றொன்றை பசு ஈன்ற சம்பவம். இங்கு நிகழ்ந்துள்ளது[ கம்பளை ஹிஞாந்தெனியவைச் சேர்ந்த ஜி. எம். விஜயரத்னவுக்குச் சொந்தமான இந்தப் பசு, மிகவும் கஷ்டப்பட்டு ஈன்ற கன்றுக்கு ஒரு தலை, இரு உடல்கள், இரு வால்கள், ஆறு கால்கள் இருக்கின்றன. பிறக்கும் போது கன்று உயிருடன் இருக்கவில்லை.

இந்த அதிசயமான 'கன்று' பேராதனையிலுள்ள மிருக வைத்திய நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# யாழ். நூலக முன்றலில் ஜி ஜி.க்கு சிலை

யாழ்ப்பாணம், புதன்

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உருவச்சிலை யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய முன்றலில் நிறுவப்படவிருக்கிறது.

இதற்கான அங்கீகாரத்தை உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா வழங்கியுள்ளார்.

அமரர் ஜி. ஜி. யின்சிலை நிறுவுவதற்குப் பொதுசன நூல்நிலைய முன்றலை ஒதுக்கித்தருமாறு, முன்னாள் மாநகரசபை உறுப்பினரான திருமதி அ. சுவாமிநாதர் அமைச்சரிடம் கோரியிருந்தார்.

குருநகரில் தற்போது அமரர் ஜி. ஜி. யின் இரு உருவச்சிலைகள் அமைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. [க-அ]

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
## வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் 5-11-77க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

### 1 பொதுமுகாமையாளர் தரம் 3

கல்வித் தகைமைகள்:
1. கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி, அல்லது
2. 3 வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரம் அல்லது
3. 5 வருடகால அனுபவம் பொருந்திய மூன்றாைநாட் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது
4. ரூபா 20,00,000ஐ வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமைப் பதவியொன்றில் 3 வருடகால அனுபவமுடைய ஒருவர்.

வயது: 28 வயதிற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: 340—590
15×10, 20×5

### 2 பொது லிகிதர் தரம் 1

கல்வித் தகைமைகள்:
1. கூட்டுறவுப் பயிற்சிபெற்ற பட்டதாரி அல்லது
2. பொது எழுதுநர் தரத்திலுள்ள தரம் 2 பதவியில் ஐந்து வருடகால அனுபவம்.

வயது: 28 வயதிற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: 300—490
10×10, 15×6

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் கடிதப் போக்குவரத்துச் செய்யக்கூடிய தகுதி உடையோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தலைவர்,
நல்லூர் ப. நோ. கூ சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

7461

## கேள்வி விளம்பரம்
## அறிவித்தல்

கொக்குவில் கிராமசபை விசேட ஆணையாளரால் 1977ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் திகதி காலை 10-30 மணிவரை கீழ்க்காட்டப்படும் வேலைகளுக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். படிவங்கள் வைப்புப்பணம் ரூ. 50/-ம் பத்திரப் பணம் (மீளளிக்கப்படாதது) ரூ. 10/-ம் செலுத்தியதின் பெயரில் 01-11-77ந் திகதி மாலை 3-00 மணிவரை வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட வேலையின் ஒரு பகுதியை செய்விப்பதற்கு விசேட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

### வேலைகள் விபரம்

1. சைவப் பாடசாலை வடக்கு வீதி திருத்தல்
2. கம்பட்டான் ஒழுங்கை திருத்தல்
3. அன்னுங்கை வீதி திருத்தல்
4. நவரட்ணராசா வீதி திருத்தல்
5. செருக்கப்புலம்வீதி திருத்தல்
6. சம்பியன் வீதி திருத்தல்
7. கலட்டி முந்தல் ஒழுங்கை திருத்தல்
8. காரைக்கால் மயான எல்லைச்சுவர்
9. கோண்டாவில் கிழக்கு மயானமடம் நிலவேலை, பூச்சுவேலை
10 கொக்குவில் மயானமடம் திருத்தவேலை
11. பொதுநூல்நிலையக் கட்டிடம்.

ந. அமுதசாகரன்
விசேட ஆணையாளர்,
கிராமசபை, கொக்குவில்.
7404

## கோட்டு விற்பனவு விளம்பரம்
### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு 14915
1. மருசிலின் யோன்பிள்ளை
இல: 7, அடம்பன்வீதி, குருநகர், யாழ்ப்பாணம்
வழக்காளி
எதிராக
1. மரியாம்பிள்ளை மோசேஸ்
2. பெண் கில்ட்டா
இல. 21 டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 14915-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9ம் திகதி (9-11-77) முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 6927-33 சதம். 20-6-75ம் ஆண்டு தொடக்கம் 18-3-77 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடம் ஒன்றுக்கு 9வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 766-22 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை புளியடியிற்புலமும் மனைவளமும் "நில. பர. 1. குளி 9" இது 1964ம் ஆண்டு மாசிமாதம் 2ம் திகதி நிலஅளவையாளர் அ. லாசறஸ் அளந்து தயாரித்த 3082ம் இலக்கப் படத்தின்படி 106ம் இலக்கத்துண்டுக்காணி இதற்கெல்லை கிழக்கு 107ம் துண்டுக்காணி. வடக்கு 105ம் இலக்கத் துண்டுக்காணி. மேற்கு பொதுவாக வழிப்பாதை. தெற்கு றோட்டுக்காக விடப்பட்ட காணி இதடங்கலும்.

ப. நா. தருமலிங்கம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்

167/1 கோவில் வீதி
நல்லூர்
14-10-77. 7466

'தூங்காதே தம்பி தூங்காதே'

# கல்லூரிகளில் இப்பாடலை ஒலிபரப்பவேண்டுமாம்

## எம். ஜி. ஆர். அறிவுரை

சேலம், அக். 21

''தூங்காதே தம்பி தூங்காதே- குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்'' என்று நாடோடி மன்னன் திரைப்படத்தில் தாம் பாடியதை மாணவர்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மாணவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

அருப்புக்கோட்டையில் நடைபெற்ற பாடசாலைகளின் கலை விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கல்லூரிகளில் இந்தப் பாடல்களை ஒலிபரப்புவதன்மூலம் மாணவர்களது சிந்தனைகளில் மாற்றம் ஏற்படும். அதற்காக கல்லூரிகள் இந்த ஒலிப்பதிவு தட்டுக்களை வாங்குவதற்கு மாநில அரசு உதவும் என்றார். (கெ-இ)

# தாய்லாந்துப் பிரதமரும் அமைச்சர்களும் காவலில்

## இராணுவப்புரட்சியின் எதிரொலி; 78-ல் பொதுத்தேர்தல்?

பாங்கொக், அக். 21

தாய்லாந்தில் நேற்று இடம்பெற்ற இரத்தம்சிந்தாப் புரட்சியின்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இராணுவ பீடம் பிரதம மந்திரியையும் சக அமைச்சர்களையும் தடுப்புக் காவலில் வைத்துள்ளது.

அங்கு அடுத்த ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெறும் என்றும் இராணுவபீடம் அறிவித்துள்ளது. கடந்த வருடம் அங்கு நடைபெற்ற புரட்சியின் பின் 80-ம் ஆண்டே பொதுத் தேர்தலை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் 5 பேருக்கு மேல் கூடக்கூடாது என்றும் பதுக்கல், அதிகவிலை ஆகியவற்றுக்கு எதிராகக் கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி அட்மிரல் சான் ஷங்காட் தெரிவித்துள்ளார். (இ)

# இந்திரா மீது மேலும் இரண்டு உறுதியான வழக்குகள்

## சரண்சிங் தகவல்

புதுடில்லி, அக். 21

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு எதிராக மேலும் 2 உறுதியான வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்று இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைநிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியின்போது அவர் மேலும் கூறியதாவது:

எண்ணெய் அகழ்வு வேலைகள் தொடர்பாக இரண்டு உறுதியான வழக்குகள் இப்போது மத்திய புலனாய்வுத்துறைப் பகுதியினரால் விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

அவற்றைவிட மோசமான குற்றச்சாட்டுக்களும் அவர் மீது சுமத்தப்படவுள்ளன.

தமது ஆட்சியின்போது பல முக்கிய பைல்களில் திருமதி காந்தி கைச்சாத்திடாமல் சாமர்த்தியமாகத் தப்பிவிடலாமென எண்ணிச் செயல்பட்டார். ஆனால் அவருக்கு அதனால் பல சிரமங்கள் ஏற்படும் என அவர் எண்ணியிருக்கவில்லை. (இ)

# "இந்திரா சர்வாதிகாரத்தை எதிர்த்ததில்என்ன தவறு?"

நீலகிரி, அக். 21

''சென்ற ஆண்டு எம்மீது சர்க்காரியா கமிஷன்! இந்த ஆண்டு அம்மையார் திருமதி இந்திராகாந்தி மீது ஷா கமிஷன். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதற்கு இணங்க நாட்டு நடப்புகள் மாறிக்கொண்டேவருகின்றன. சரித்திரம் திரும்பும் என்பதற்கான சான்றுகள் எமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன'' இவ்வாறு கலைஞர் மு. கருணாநிதி கடலூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

இது அணுக்குண்டுக் காலம்! ஆகாய விமானத்தில் வந்து குண்டுகளைப் பொழிகிற இந்தக் காலத்தில் வாளும் கேடயமும் போர்முறைக்கு ஆகாதென்று தெரிந்துங்கூட குடியரசுத்தலைவர் ஆட்சிக்காலத்தில் என்னுடைய ''வாளும் கேடயமும்'' என்ற புத்தகம் தடைசெய்யப்பட்டதென்றால் பெயரைப் பார்த்தே இந்திரா அரசு எந்த அளவிற்குப் பயந்தது என்பது தெரிகிறது.

சீன யுத்தத்திற்குப்பிறகு- பாகிஸ்தான் யுத்தத்திற்குப் பிறகு அவசரகாலச் சட்டம் நீடிக்கின்றபொழுது அதை தலைவர் பேரறிஞர் அண்ணா எதிர்த்திருக்கின்றார்.

அண்ணாவின் உண்மையான தம்பிகள் என்ற அந்த அடிப்படையில்தான் இந்திரா அரசு கொண்டுவந்த அவசரகாலச் சட்டத்தையும் எதிர்த்தோம். இந்திராகாந்திஅரசு கொண்டுவந்த அவசரகாலச்சட்டத்தினால் பேச்சுரிமை, எழுத்துரிமை விசாரணையில்லாமல் யாரையும் சிறையில் வைக்கலாம் என்ற நிலைமை இருந்திருக்கின்றது.

இந்தியாவின் சுதந்திரத்திற்காக 14 ஆண்டுகள் சிறையில் இருந்த தலைவர்களை சிறையில் வைக்கலாமென்ற நிலை உருவாகியது.

அப்படிப்பட்ட இந்திரா அரசின் சர்வாதிகார அரசியல் சட்டத்தை கழகம் எதிர்த்ததில் என்ன தவறு? (கெ-இ)

# இந்தியதூதரகஊழியருக்கு கொலைப் பயமுறுத்தல்

புதுடில்லி, அக். 21

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் கொலை செய்யப்படுவார்கள் என அநாமதேயக் கடிதங்கள் மூலம் பயமுறுத்தப்படுகின்றனர் என்று புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு இதுபோன்ற பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்படுகின்றனவாம்.

இதேவேளையில் நியூயோர்க்கில் உள்ள 'எயர் இந்தியா' அலுவலகத்திற்கு நேற்று குண்டு வீசப்பட்டதாகவும் அதிஷ்டவசமாக அக்குண்டு வெடிக்கவில்லை என்றும்அறிவிக்கப்பட்டது. (இ)

## ரூ. 4 லட்சம் அபின் மீட்பு!

கல்கத்தா, அக். 21

கல்கத்தா துறைமுகத்திற்கு அருகே காலியாக உள்ள குடிசை ஒன்றிலிருந்து 4 லட்சம் ரூபா பெறுமதியான அபினை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். (இ)

## "சாவகச்சேரிக்கு பொதுமைதானம் அவசியம்"

மட்டுவில், வெள்ளி

''மக்கள் மத்தியிலேயே ஒருமைப்பாட்டையும், பரஸ்பர அன்பையும் வளர்ப்பதற்கு விளையாட்டு ஒரு முக்கிய சாதனமாக அமைகிறது. ஆகவே தான் அரசாங்கமும் அத்துறைக்கு ஒரு தனி அமைச்சையே நிறுவி அத்துறையை பேணி வளர்த்து வருகிறது''

இவ்வாறு தென்மராட்சி ரீதியில், தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியைத் தொடக்கிவைத்துப் பேசிய, சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு.கே. நவரத்தினம் கூறினார்.

தென்மராட்சி விளையாட்டுக் கழகத் தலைவர் சமூகஜோதி திரு.சி. க. மயில்வாகனம் தலைமையில், சாவகச்சேரி மகிழம் கேணி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

தலைவர் தனதுதலைமை உரையின்போது இப்போட்டி இளைஞர் மத்தியிலே ஒற்றுமையையும் வளர்க்கும். சாவகச்சேரியில் ஒரு நவீன பொது விளையாட்டு மைதானத்தை விரைவில் அமைத்துத்தர ஆணையாளர் ஆவன செய்ய வேண்டும்'' என்றார். [உ]

## லயன்ஸ் வட்டு. கிளை

யாழ்ப்பாணம், சனி

லயன்ஸ் கழகத்தின் கிளை ஒன்று வட்டுக்கோட்டையில் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது.

டாக்டர் யோகு பசுபதி, டாக்டர் சுப்பிரமணியம், தெல்லிப்பளை லயன்ஸ் கிளைத்தலைவர் சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆகியோரும் அவ்வேளை சமுகமளித்திருந்தனர்.

கிளையின் தலைவராக டாக்டர் பீ. அத்தனுசியாரும், உபதலைவர்களாக டாக்டர்பாலன் செல்லையா, திரு. லூதர்செல்வராஜா, திரு. கே. அருணாசலம் ஆகியோரும், செயலாளராக சட்டத்தரணி திரு. கே. குணரத்தினமும், பொருளாளராக டாக்டர் அல்போன்ஸாம் தரிவாகினர். (உ)

# சோவியத் மக்களுக்கு இலங்கை நண்பர்கள்செய்தி

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 7-ந்திகதி சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டமை அக்டோபர் புரட்சியின் 60-வது ஆண்டைக் கொண்டாடும் சோவியத் மக்கள் வாழ்வின் பெரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு ஆகும்.

இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்கம் சோவியத் மக்களுக்கு அனுப்பியுள்ள செய்தி இவ்வாறு கூறியுள்ளது

அச்செய்தியில் மேலும் கூறுவதாவது: இந்த அரசியல் சட்டம் சோவியத் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆழமான மாற்றங்களை உலகுக்குக்காட்டுகிறது. 14 கோடி சோவியத் மக்கள் இந்தப் புதிய அரசியல் சட்டத்தை கூடிக்கலந்து பரிசீலித்துள்ளனர். உழைக்கும் மக்களிடமிருந்து 400 ஆயிரம் ஆலோசனைகள் வந்தன. இவை மிக்க கவனமாக ஆராயப்பட்டு நகல் சட்டத்தில் 110 ஆணைகள் திருத்தப்பட்டன. இவை மெய்யான ஜனநாயகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

இந்த அரசியல் சட்டம் மனிதன்மீது அவனது உரிமைகள், எதிர்காலத்தில் அவனது பரிபூரணமான வளர்ச்சி ஆகியனமீது முழுமையான கவனம் எடுத்துள்ளதே, குறிப்பிடத்தக்க அம்சமாகும். மெய்யான ஜனநாயகம் இங்கும் பிரதிபலிக்கிறது. இந்த அரசியல் சட்டம் யுத்தத்தைத் தடை செய்துள்ளது. (இ)

# 10-ம் நூற்றுண்டு சீனப் பீங்கான்கள்: அல்லைப்பிட்டியில் கண்டு பிடிப்பு

யாழ்ப்பாணம், சனி

பத்தாம் நூற்றுண்டில் யாழ்ப்பாணக் கரையோரமாக சீனக்கப்பல்கள் வர்த்தகத் தொடர்பின் அடிப்படையில் சென்றுள்ளதனைப் புலப்படுத்தும் வகையிலான சித்திர, வர்ணவேலைப்பாடமைந்த பண்டைச்சீன ஜாடிகள், கிண்ணங்கள் ஆகியவற்றின் உடைந்த பகுதிகள் அகழ்வாராய்ச்சி மூலம் அல்லைப்பிட்டிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் பேராசிரியரும், ஆராய்ச்சியாளருமான டாக்டர் ஜோன் கார்ஸ்வெல், கட்டுப்பெத்த, கட்டடக் கலை விரிவுரையாளர் ஆஸ்லி டிவொஸ்ஆகியோர், யாழ். தொல்பொருள்துறை பிரதேச அதிகாரி திரு. ம. பொ. செல்வரத்தினம் சகிதம் தீவுப்பகுதி கரையோரப் பிராந்தியத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாகஅல்லைப்பிட்டிப் பகுதியில் கரையோரமாக மணல்மேடுகளில் இப்பீங்கான் துண்டுகள்கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு மேற்கொள்ளப்பட்ட சிரான அகழ்வாராய்ச்சி மூலம் பல்வேறு வகைகளைச் சேர்ந்ததும் சித்திரவேலைப்பாட்டோடும், வர்ணமிடப்பட்டதுமான பண்டைச் சீனர்களின் கலைப்பண்பாட்டை உணர்த்தும் ஜாடிகள், கோப்பைகள், கிண்ணங்கள் ஆகியவற்றின் உடைந்த பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை யாழ்ப்பாணத்தோடு சீனநாடு கொண்டிருந்த வர்த்தகத்தையும் 10-ம் நூற்றுண்டிலும் சீனநாட்டுக் கப்பல்கள் யாழ்ப்பாணக் கரையோரமாகச் சென்றதையும், இப்பகுதியில் துறைகள் இருந்ததையும் எடுத்துக்காட்டுவனவாக உள்ளன எனக் கருதப்படுகிறது.

பெரும்பாலும் சீனக்கப்பலில் கொண்டுவரப்பட்ட பீங்கான்கள் இக்கரையோரப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது.

இப்பீங்கான்களின்காலம் 'சுங்' மரபைச் சார்ந்த 10-ம் நூற்றுண்டு என நம்பப்படுகிறது.

இவ்வர்ணப் பீங்கான்கள் சீரமைக்கப்பட்டு வெகு விரைவில் யாழ்ப்பாணம் தொல்பொருள் காட்சிச் சாலையில் காட்சிக்காக வைக்கப்படும் என்று அறியப்படுகிறது. (உ)

## அண்ணா சிலைக்கு அனுமதி

சென்னை, அக். 21

பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே கோடம்பாக்கம் நெடுஞ்சாலையின் வடகிழக்கு மூலையில் ஏரிக்கரை முதல் சந்தியில் அமைக்க சென்னை மாவட்ட தி. மு. கவுக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சிலை அமைப்பதற்கு இரு இடங்களைத் தெரிவு செய்தனுப்புமாறு மாநில அரசு சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. சிதாபதியை கோரியதையடுத்து இரு இடங்களை அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர்.

சிலை அமைப்பதற்கு அனுமதி கிடைத்ததையிட்டு தி. மு. க. வினர் நன்றி தெரிவித்துள்ளனர். (கெ-கு)

## இந்திரா ஆதரவு கையெழுத்து வேட்டை!

புதுடில்லி, அக். 21

திருமதி இந்திரா காந்தியை காங்கிரஸ் தலைவர் பதவிக்குத் தெரிவுசெய்வதற்கு ஆதரவாக இந்திரா ஆதரவாளர்கள், மாநிலங்களில் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர். (இ)

## நெறியாளர் குழு நியமனம்

சங்கானை, வெள்ளி

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினர்களாக பின்வருவோர் நியமனம்பெற்றுள்ளனர்.

கே. அருணாசலம், என். இராமநாதன, வி. சோமசுந்தரம், கே. சோமசுந்தரம், எஸ். சிவமணி, எஸ். கதிரவேலு, எஸ். கிருஷ்ணர், கே. சின்னத்துரை, ஏ. பரஞ்சோதி (உ)

# ஈழத்தின் மொழிப்பிரச்னை:

## சாலேஇளந்திரையன் யோசனே

புதுடில்லி, அக். 21

இலங்கையிலே சிங்களப் பகுதிகளில் சிங்களம் ஆட்சி மொழியாகவும், தமிழ் துணை மொழியாகவும், தமிழ்ப்பகுதிகளில்தமிழ் ஆட்சி மொழியாகவும், சிங்களம் துணை மொழியாகவும் அரசியல் சட்டத்தில் பொறிப்பதன் மூலம் ஈழத்தின் மொழிப் பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்கலாமென்று டில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் அறிவியக்கத் தலைவருமான டாக்டர் சாலை இளந்திரையன் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். இதனை விடுத்துப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் மும்மொழித் திட்டக் கொள்கை ஒருக்காலும் ஈழத்தில் இனசௌஜன்யத்தை ஏற்படுத்த மாட்டாதென்று அவர் தமது அறிக்கையில் மேலும் கூறுகிறார். பேராசிரியர் சாலை இளந்திரையன் தமது அறிக்கையில் கூறுவதாவது:

சிறிலங்காவின் மொழிப் பிரச்னை தீராத பிரச்னையாக இருந்துவருகிறது. இப்பெரும் பிரச்னையைத் தீர்த்துவைக்கும் வகையில் புதிய பிரதமர் மும்மொழித் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார். இதன்படி இலங்கை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்னும் மூன்று மொழிகளையும் படிக்கவேண்டும். இப்படிப் படிப்பதன் மூலம், இந்தச் சிறிய நாட்டின் மக்கள் ஒருவரோடு ஒருவர் பழகவும் ஒருவர் பிரச்னையை மற்றவர் புரிந்துகொள்ளவும் வசதி ஏற்படுமென்று பிரதமர் கருதுகிறார்.

### இந்தியாவிலே...

தமிழர்கள் சிங்களமும், சிங்களவர்கள் தமிழும், இந்த இரண்டு பேரும் ஆங்கிலமும் படிக்காததால்தான் இவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவில்லை என்பது முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிச்சுப்போடுவது போலவே இருக்கிறது. இந்தத் தீவிலே உள்ள மக்கள், தங்கள் அண்டை வீட்டாரின் மொழியையும் ஓர் அனைத்துலக மொழியையும் பயில்வதால் நட்டம் ஒன்றுமில்லை. ஆனால் அண்டை நாடான இந்தியாவில் இதுபோன்ற மும்மொழித் திட்டம் படுகிற பாட்டை இலங்கை அரசும் மக்களும் மறந்துவிடக்கூடாது.

எங்கோ ஒரு சுவிட்சர்லாந்தில் பல மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சோஷலிச நாடுகளில் மொழிச் சிக்கல்களுக்கே இடமில்லையென்றும் சொல்லுகிறார்கள். அங்கெல்லாம் இந்தப் பிரச்னை சுமூகமாகத் தீர்க்கப்பட்டுள்ளதா, அல்லது சிறுபான்மையர் ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதைக் காலம்தான் நமக்கு உணர்த்தவேண்டும். பல மொழிகள் பேசப்படும் இந்திய நாட்டில், மொழிப் பிரச்னைக்குத் தீர்வாக வகுக்கப்பட்ட மும்மொழித் திட்டம் கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது என்பதைச் சிறிலங்காவின் மக்கள் உணரவேண்டும். ஈழத்திற்னைப்பாலவேஇந்தியாவிலும்பெரும்பான்மையினரின் மொழி என்று சொல்லி இந்தி மொழி ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட்டது. அதன் காரணமாக மற்ற மொழியினருக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்ற உண்மை உணரப்பட்டதால், மும்மொழித் திட்டமொன்று வகுக்கப்பட்டது, அதன்படி, இந்திமொழிப் பகுதியின் மக்கள் தங்கள் தாய்மொழியோடு ஆங்கிலமும் ஒரு தென்னிந்திய மொழியும் கற்கவேண்டும்; மற்ற மொழிக்காரர்கள் தங்கள் தாய்மொழியோடு இந்தியும் ஆங்கிலமும் கற்கவேண்டும்.

மிக நல்ல திட்டம்போல் தோன்றுகிற இந்த மும்மொழித்திட்டம், பெரும்பான்மை மொழிக்குரிய மக்களின் பொறுப்பற்ற தன்மையால் அப்பட்டமாகத் தோல்வி அடைந்துவிட்டது. இந்தி மற்றும் ஆங்கிலத்துடன் தமிழ் அல்லது தெலுங்கு என்று தொடங்கிய வட இந்திய மாநிலங்கள், முதலில்தென்னிந்திய மொழிக்குப்பதில் ஒரு வட இந்திய மொழி என்று ஆரம்பித்தன. பிறகு, அதையும் ஒழித்தார்கள்; கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதுபோல, அவர்களின் மும்மொழித்திட்டம் ''இந்தி மட்டும் படித்தால் போதும்'' என்ற அளவுக்குத் தேய்ந்துபோய்விட்டது.

### கொக்கு தலையிலே......

பல மொழிகளைப் படிப்பது என்பது மிக இனிய திட்டம் போலத்தோன்றும்; நாளடைவில், தாங்கள் படிக்கும் கூடுதல் மொழியால் தங்களுக்குப் புதிய பெரிய வாய்ப்புஒன்றும் கிட்டவில்லை என்று தெரிந்ததும், மக்கள் அதிலே ஆர்வம் காட்டமாட்டார்கள். குறிப்பாக, மொழித் தேசியத்தின் அடிப்படையில் பிரிந்துமோதிக் கொள்ளும் மக்களிடம், கழுவாட்டுப்பூனையாரின் சைவஉபதேசம் போன்ற இந்த உபதேசம் செயற்படமுடியாது.

அது மட்டுமல்ல, பெரும்பான்மையினரின் மொழியே ஆட்சிமொழியாக (அரசாங்க அலுவல்மொழியாக) இருக்கும் வரை, அவர்கள் சிறுபான்மை மொழியைக் கற்பதில் ஆர்வம் கொள்ளமாட்டார்கள். வீட்டிலும் வெளியிலும் எந்த வகையிலும் அவர்களுக்குப் பயன்படாத ஒருமொழியைப்படிக்க வேண்டுமென்று அவர்களைவற்புறுத்துவதும் முறையில்லைத் தானே? எனவே, பிரதமரின் மும்மொழித்திட்டம் என்பது, கொக்கு தலையில் வெண்ணெயை வைத்து அதைப் பிடிக்கிற திட்டமே தவிர வேறில்லை.

### இரண்டு மொழிகள்

சிறிலங்காவின் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சுலபமான வழி இருக்கையில் இப்படிச் சுற்றிவளைப்பதிலே பொருள் இல்லை, தமிழ்ப்பகுதிகளில் தமிழே ஆட்சிமொழி, சிங்களமே துணைமொழி என்றும், சிங்களப்பகுதிகளில் சிங்களமே ஆட்சிமொழி, தமிழ் துணைமொழி என்றும்அரசியல் சட்டத்திலே பொறித்துவிட்டால் இலங்கை நாட்டின் பல சங்கடங்கள் தீர்ந்துபோகும; இரண்டு மொழியும் தெரிந்தவர்களுக்கு நாடெங்கும் வேலைவாய்ப்பு இருக்குமாதலால் எல்லா மக்களும் (அல்லது அரச அலுவல்களை நாடுகின்றவர்கள்), எந்த மொழியினராலும் இரண்டு மொழிகளையும் விரும்பிப்படிப்பார்கள் இதைவிடுத்து, எல்லா மக்களுக்கும் மூன்று மொழிகளைக் கற்பிக்கப் போகிறோம என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய்; அது கறிசமைக்க உதவாது.

இலங்கையிலே தமிழ் ஈழத் தனிநாடு அமைந்தாலும இரண்டுநாடுகளுமே இப்படிப்பட்டதொரு மொழிக் கொள்கையை கடைப்பிடிப்பதிலே தவறில்லை; இரண்டு நாடுகளிலுமே மொழிச் சிறுபான்மையினர் இருந்தே வருவார்கள். அவர்களையும் அளாவியதாக நாட்டின் மொழிக் கொள்கை அமைவதே சிறப்பு. [அ]

## கிணறுகள் பற்றி ஆய்வு

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சி தெற்கு-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கால்நடைகள், நீர்ப்பாசனத் தேவைகள் ஆகியவற்றிற்குப் பயன் படுத்தப்படும் கிணறுகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பதினைந்து விஞக்களைக் கொண்ட வினக்கொத்து ஒன்றின் அடிப்படையில் இக் கிணறுகள் பற்றிய ஆய்வின் மதிப்பீட்டு விபரங்கள் திரட்டப்படும்.

ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப் படுகிறது. இது சம்பந்தமாக வடமராட்சி தெற்கு மேற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. வீ. வேலும்மயிலும் தேவையான நடவடிக்கைகளைக் கவனித்து வருகின்றார். (உ)

## ''இறைவன்பால் இறைஞ்சி

## மனதைப் பண்படுத்துவதன் மூலம் மனேகர வாழ்வு மலரும்''

### வாணிவிழாவில் நீதிபதி அப்துல்காதர்

யாழ்ப்பாணம், சனி

''தனிமனித வாழ்வின் உயர்வே சமுதாய உயர்வுக்கு வழிவகுக்கும். எனவே நம்மை நாமே நற்குணத்தால் தரமுயர்த்திக்கொள்வதால் சமுதாயம் தானாகவே உயர்கிறது என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டும்'' என்று யாழ். மேல் நீதிமன்றத்தில் கொண்டாடப்பட்டவாணிவிழாவில்மேல் நீதிமன்ற நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் கூறினார்.

நீதிமன்றப் பதிவாளர் திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில், 'ஒருவரது மனத்தில் எழுகின்ற தீய எண்ணங்களே சமுதாயத்தில் சட்டவிரோத செயல்கள் நிகழ்வதற்கு மூலகாரணமாகின்றன. எனவே மனதில் தீயஎண்ணங்கள் ஏற்படுவதற்கு இடமளிக்கலாகாது.

''இன்றைய காலகட்டத்தில் கடவுள்இருக்கிறாரா? இல்லையா என்ற வாதப்பிரதி வாதங்கள் நிகழ்கின்றன. இவ்வாறன மனப்பக்குவமில்லாத வாதங்களுக்கு நமது புலன்களை நல்வழிப்படுத்தத் தவறுவதே காரணமாகும். இது ஒரு விதண்டாவாதமாகும்.

'இடையன்ஒருவன் எவ்வாறு தனது மந்தைகளை அடக்கித் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறனே அதேபோல் நாமும் நம் ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒருவழிப்படுத்தி இறைவன் பால் செலுத்தபழகிக்கொள்ளவேண்டும். இவ்விதம் நம் மனதைப் பண்படுத்திக் கொண்டால் அர்த்தமற்ற சிந்தனைகளுக்கும் விஞக்களுக்கும் இடமிரா. இறைவன்மனேகரவாழ்வு அளிப்பான். நமது முன்னேர்போல் ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' இறைவன் பெருமைகளை உணராமலும் உணரமுயந்சிக்காமலும் இருப்பதனலேயே மனதை சீர்கெடச்செய்யும் விவாதங்கள் எழ ஏதுவாகின்றது''.

யாழ்மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம், யாழ் நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம், ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் முதலானேரும் உரையாற்றினர். (கா-உ)

## உள்ளூராட்சி பிரதிஅமைச்சர் வியாழனன்றுயாழ்.வருகிறர்

யாழ்ப்பாணம், சனி

'ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டபின், முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமான விஜயமொன்றை உள்ளூராட்சி பிரதிஅமைச்சர் திரு. பி.சி.இம்புலான மேற்கொள்ளவிருக்கின்றார்.

இம்மாதம் 27ம் தேதி யாழ்ப்பாணத்திற்குவரும் உதவி அமைச்சர் திரு. இம்புலான அன்றுகாலை 9மணிக்கு, யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடக்கும் மாநாட்டில் கலந்துகொள்வார்.

இதைத் தொடர்ந்து அவர் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு விஜயம் செய்வார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்தினல் அமைச்சருக்கு நண்பகல் விருந்தளிக்கப்படும்.

இதன்பின்,அமைச்சர் நவீன மார்க்கட் கட்டட வேலைகள், மற்றும் மாநகரசபை அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிடுவார். (க-அ)

## குளக்கரையில் பிணமாகக் கிடந்தார்

கொடிகாமம், வெள்ளி

வீட்டிலிருந்து திடீரெனக் காணமல்போன 17 வயது வாலிபர் ஒருவர் குளக்கரையில் பிணமாகக் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டார்.

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த குஞ்சு என்பவரே இவ்வாலிபராவார்.

கிருமிநாசினி அருந்தி இவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சி. பாலகிருஷ்ணர் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (உ)

## மரம் நாட்டு விழா

மட்டுவில், வெள்ளி

சிவதர்மவள்ளல் க. கனகராசா மரம் நாட்டு விழாவை நேற்று ஆரம்பித்துவைத்தார். இந்த மரம் நாட்டு விழாவில் சஞ்சிவி, தேக்கு, சவுக்கு ஆகிய மர நாற்றுக்கள் நாட்டப்பட்டன.

பொதுமக்களுக்கும் இவற்றை இலவசமாக மில்க்வைற் அதிபர் வழங்கவுள்ளார்.

ஆணையாளர் நடவடிக்கை:

## யாழ். பஸ்நிலையத்தின் ஒரு பகுதி இடம் மாறும்

யாழ்ப்பாணம், சனி

மிகவிரைவில் யாழ்ப்பாண பஸ்நிலையத்தின் ஒரு பகுதி பண்ணைக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பல் வேறுஇடங்களுக்கும் செல்லும் பஸ்கள் நிறுத்தக்கூட இடம் குறைவாக இருப்பதாலேயே மேற்கண்ட முடிவைத் தாம் எடுக்கவேண்டியுள்ளதாகத் திரு. சிவஞானம் தெரிவித்தார்.


இதனல் மிகவிரைவில்யாழ்ப்பாணம் பண்ணையில் புதிய பஸ் நிலையக் கட்டிடங்கள் அமைக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுஇவ்விதமிருக்க யாழ். பஸ் நிலையத்தின் காரைநகர் பஸ் தரிப்பு நிலையம் சேறும் சகதியுமாக இருப்பதாகவும் இதனல் பஸ் பிரயாணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாகவும் செய்யப்பட்ட புகாரை அடுத்து விசேஷ ஆணையாளர் திரு. சிவஞானம் அப்பகுதியைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளார். (கா-உ)

## உங்கள் சைக்கிளா?

யாழ்ப்பாணம், வெள்ளி.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் கோரிக்கையற்றுக்கிடக்கும் சைக்கிள்களைத் திரும்பப் பெறவிரும்பும் உரிமையாளர்கள், டிசம்பர் 1ம் தேதிக்கு முன் தகுந்த ஆதாரம் காட்டி, யாழ்ப்பாணம் நீதவான் திரு. கே. வி. நவரத்தினத்திற்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க. அ)



**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only

The long awaited fell length documentary on the wonders of Colourful fascinating undersea world of the deep oceans in the glory of Eastman Colour.

**The Great Barrier Reef**

A must film for School children பள்ளிக்கூடப் பிள்ளைகள் பார்க்கவேண்டிய படம்.
முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். போன்: 360

**மனோஹரா** (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ் அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**துணிவே துணை**

**லிடோ** காலை 7-00 மணிக்கு காட்சி ஆரம்பமாகும். காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
(யாழ் நகர்) போன்; 7693
எம். ஜி. ஆர். லதா நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**

**வின்ஸர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
**அன்னக்கிளி**

**ராணி** (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
யாழ் நகர் திலிப்குமார் பிருதிவிராஜ்கபூர் மதுபாலா நடித்த
போன்; 7642
24-10-77 முதல் 'FIVE CRAZY BOYS' (Color) | **அக்பர்** (தமிழ்) [கலர்]


# வெள்ளைப்பிரம்பு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ் லயன்ஸ் கழகத்தினர் 'உலக வெள்ளைப் பிரம்பு' தினத்தன்று 20 பார்வையற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்புகளை வழங்கினர்.

யாழ். திசாரொய்ஸ் நிறுவனத்தினரால் இந்த வெள்ளைப் பிரப்புகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் லயன் டாக்டர் வி.பி. அமரசிங்கம் தலைமையில் யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்ற வைபவத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம், கண் வைத்திய நிபுணர் டாக்டர் கனகரத்தினம் ஆகியோர் உரையாற்றினர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஜி.சி.ஈ. உயர்தரவகுப்பில் கல்விகற்கும் பார்வையற்ற மாணவி ஒருவர் இவ்வைபவத்தில் நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் கூறியதாவது;

பார்வையற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்புகளை அன்பளிப்புச் செய்தால் மட்டும் போதாது, வாகனங்களின் சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் இதுபற்றி விபரமாகத் தெரியப்படுத்த வேண்டும். இப்படிச் செய்வதின் மூலமே பார்வையற்றவர்களை அவர்கள் அடையாளம் காணமுடியும். (இ)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

குளவிசுட்டான் கனிஷ்ட வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் கலைமகள் விழாவும் வித்தியாலய அதிபர் திரு.சு. துரைலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் திரு.க. சச்சிதானந்தம் சிறப்புரை நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 2-30 7-00
ஜெய்சங்கர் - சாவித்திரி
**தாய்க்கு ஒரு பிள்ளை**

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி பி. ப. 4-30, 7-00
**பணம்பந்தியிலே**

**RIO** (Jaffna)
Daily 4 Shows
GOD FORGIVES I DON'T!


# 'கல்வியைப் பெற்றவனே வீரமும் செல்வமும் பெறலாம்'

யாழ்ப்பாணம், சனி

"உலகில் வீரமா, செல்வமா, கல்வியா சிறந்தது என்று முன்னரெல்லாம் எல்லோரும் விவாதித்து வந்தார்கள். ஆனால் இன்று கல்விக் கடவுளாகிய சரஸ்வதியின் அனுக்கிரகத்தினால் கிடைக்கும் அறிவின் மூலம் செல்வமும், வீரமும் பெறலாம் என்பது யாவராலும் உணரப்பட்டுள்ளது."

இவ்வாறு சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்ற சரஸ்வதி பூஜையின் போது பேசிய கிளை முகாமையாளர் திரு. பொ. கதிர்வேலாயுதபிள்ளை கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"இன்று உலகில் சகலரும் கல்விக்காக சரஸ்வதியை வணங்கிவருகிறார்கள். சரஸ்வதியைத் தொழுது சகலரும் தொழிற் கல்வியைப் பெற்று பல தொழில் துறைகளை ஆரம்பிப்பதன்மூலம் நமது நாட்டைச் செழிப்புறச் செய்யலாம். தொழில் துறைகளை ஆரம்பிப்பதற்கு பண உதவி செய்ய மக்கள் வங்கி என்றும் தயாராக இருக்கிறது. எனவே மக்கள் தொழில் துறைகளை மேலும் மேலும் அதிகரிப்பதன்மூலம் நாட்டைச் செல்வம் கொழிக்கச்செய்யவேண்டும்."

யாழ். மாவட்ட திட்டப் பிரிவு உதவி அதிபர் திரு. லோகேஸ்வரனும் இவ்வைபவத்தில் உரையாற்றினர். (இ)

# வீடுடைத்து ரூ. 13,000 பொருட்கள் கொள்ளை

## மூவர் கைது

யாழ்ப்பாணம், சனி

சிகிச்சையின் பொருட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய தம்பதியர்க்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவர்களது வீடு உடைக்கப்பட்டு 13,000 ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததே இந்த அதிர்ச்சிக்குக் காரணமாகும். இச்சம்பவம் மானிப்பாயில் நிகழ்ந்துள்ளது.

எஸ். ராஜரத்தினம் என்பவரது வீட்டிலேயே இச் சம்பவம் நடைபெற்றது.

மானிப்பாயில் உள்ள கல்லூரி ஒன்றில் பதில் அதிபராகக் கடமையாற்றும் திருமதி ராஜரத்தினம் சம்பவதினம் கல்லூரியில் மயக்கமடையவே அவர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டாராம். ஆஸ்பத்திரியில் இருந்து தம் மனைவியுடன் கணவர் ராஜரத்தினம் வீடு திரும்புவதற்கிடையில் இக் கொள்ளை நடைபெற்றதாம்.

பொலிசாரின் விசாரணையில் இத்தகவல்கள் வெளியாகின. சேலைகள், பணம் என்பனவே கொள்ளையடிக்கப் பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். மாணிக்கவாசகர் தொடர்ந்து விசாரணை புரிகிறார். (கா-உ)

## கார்கடத்தல்:

# எவரும் பிடிபடவில்லை

யாழ்ப்பாணம், சனி

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு யாழ்ப்பாணம்ஸ்டான்லி வீதியில் கடத்தப்பட்டு, பின்னர் இரண்டு மணிநேரத்தில் சுரும்பராயில் கோப்பாய் உபாலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்ட 'கேம்பிறிட்ஜ்' கார் சம்பந்தமாக நேற்று வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இக் கார் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் நான்கு இளைஞர்களைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

கடத்தப்பட்டு, பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட கார், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டு பின்னர் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ இல: M. B. 15057

1. ஏகாம்பரநாதன் இராசநாதனும் பெண்
2. சரஸ்வதிதேவியும்

வண்ணார்பண்ணை தென்மேற்கு, வழக்காளிகள்

எதிராக

சின்னத்தம்பி கனகசபை புத்தூர் மேற்கு, தற்போது புத்தூர் கிழக்கு, புத்தூர் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 15057-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளையும் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14-ம் திகதி (14-11-77) திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு பிரசித்த ஏலவிற்பனையை அந்தக் காணிகளுக்குள் நின்று நடாத்த நியமித்துள்ளேன்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி 3ம் வழக்காளிக்கு ரூபா 12,950/-யும் மேலும் ரூபா 10,000/-க்கு வழக்குத் தொடுத்த திகதியாகிய 1976-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ம் திகதி தொடக்கம் இறுக்கும் வரைக்கும் நூற்றுக்கு 12வீதம் வரும் வட்டியையும் வழக்குச் செலவு ரூபா 562-83 சதம் கொடுக்கவேண்டியிருப்பதாலும்,

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோயிற்பற்று புத்தூர் வடக்கிலை.

1. கம்புளியன் வயல் தெ பர. 30 கிணறும் இந்தப் பரப்பு முப்பதுக்கும் எல்லை கிழக்கும் தெற்கும் வெள்ளை வாய்க்கால், வடக்கு ஒழுங்கை மேற்கு சின்னத்தம்பி கனகசபையின் ஆதனம் இதடங்கலும் முற்பதிவு K 228/256

2. ஷெ கோயிற்பற்று புத்தூர் தெற்கிறை பட்சந்தைத் தோட்டம் நிலபர 5 ஐந்துக்கும், எல்லை கிழக்கு சின்னத்தம்பி கனகசபைக்கும், சின்னத்தம்பி சங்கரப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள் வடக்கு கந்தப்பிள்ளை கைம்பெண் சின்னத்தம்பி விதனம் மேற்கு மயில்வாகனம் சந்தையாவுக்கும் மறு பேருக்குமுரிய ஆதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலில் சொரியலாய் அரைவாசியும் கிழக்கெல்லைக் காணிக்குள்ளிருக்குங் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் முற்பதிவு K 294/195.

சி. செ. பாலசிங்கம்,
அராலி வடக்கு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
வட்டுக்கோட்டை, 4-10-77. 7468



மாதர் குலம் போற்றிடும் இரண்டாவது வெற்றி வாரம்!

**ராஜா** - யாழ்நகர் தினசரி 10-30, 2-15, 6-15, 9-45.

வெள்ளித் திரையின் விளக்கம் இது. திரையில் மின்னி மறையும் வண்ண ஜாலம். தித்திக்கும் தேன் இன் விருந்து.

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!

ஜெமினி, ஜெயசித்திரா, எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா நடித்த

**தசாவதாரம்**
(கலர்)

(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)



### மணிவாக்கு

எவ்வாறு ஒரு மனிதன் தன்னால் கண்டுகொள்ள முடியாத தன்முதுகைப் பிறர் காண்பாரோ, அதே போல் எங்களால் எங்களுடைய பிழைகளைக்காண முடியாது.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## பங்கீட்டு அரிசி!

சில கூட்டுறவுக்கடைகளில் பங்கீட்டுக்கு இப்போது வழங்கப்படும் அரிசி மிக மட்டரகமாக இருப்பதால் அந்த அரிசியைவாபஸ் பெறச் செய்துவிட்டு அதற்குப் பதிலாக நல்லரக அரிசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பீ. ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

வேறு வழியின்றி பங்கீட்டுக்குக்கொடுக்கப்படும்அரிசியைச் சாப்பிட்டுத்தான் உயிர்வாழ வேண்டுமென்ற நிலையிலுள்ள மக்கள் அனைவரும் மேற்கூறப்பட்ட செய்தியை அறிந்ததும் அமைச்சரை உளமாரவாழ்த்துவர்.

இப்போதுதான் இப்படியான மட்டரகமான அரிசி வழங்கப்படுகின்றதென்பதல்ல. இதற்கு முன்னரும் இப்படியான அரிசிவழங்கப்பட்டு வந்திருக்கின்றது.

இப்படியான சமயங்களில் மட்டரக அரிசி விநியோகிக்கப்படுகிறதென்றும் நல்லரக அரிசி வழங்கப்படவேண்டுமென்றும் மக்கள்கோரிக்கை விடுப்பார்கள். இது பற்றி ஆட்சிமன்றத்திலேயும் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

குரல் எழுப்பப்படும்பகுதியில் சிலவாரங்களுக்கு நல்லரக அரிசி விநியோகிக்கப்படும். இப்படியேஒவ்வொரு பகுதிகளுக்கும் மட்டரக அரிசி மாறிமாறி விநியோகிக்கப்படும்

சில மாதங்களுக்கு முன்னர் நாட்டின் பலபகுதிகளிலும் வயிற்றோட்ட நோய் ஏற்பட்டபோது அச்சமயத்தில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட அரிசிதான் அதற்குக் காரணமாக இருக்கலாமென்றும் கூறப்பட்டது.

பாவனைக்கு லாயக்கற்ற மட்டரக அரிசியை மக்களுக்கு விநியோகிக்காமல் கால்நடை உணவு உற்பத்துக்குப் பயன்படுத்த உத்தேசித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அரிசியைச் சேமித்து வைப்பதிலுள்ள கஷ்டங்களும் நெல் குற்றும் ஆலைகளின் பற்றுக் குறையுமே அரிசிகெட்டுப் போவதற்குக் காரணமென்று சொல்லப்படுகின்றது.

பங்கீட்டு முறையில் அரிசி விநியோகிக்கும் திட்டம் நமது நாட்டில் நடைமுறைக்கு வந்து பலவருடங்களாகிவிட்டன.

ஒரு பரீட்சார்த்தமாகசில வருடங்களுக்காவது பங்கீட்டு முறையை நீக்கிஅரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தனியாரும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பளித்துப் பார்த்தால் என்ன?

## முல்லைத்தீவில் திருப்தியற்ற மின் விநியோகமாம்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு பட்டினசபை பகுதியில் சுமார் இரண்டு மாதங்களாக சீரான மின் விநியோகம் நடைபெறவில்லை என முல்லைத்தீவு வரியிறுப்போர் சங்கம் பட்டினசபை விசேட ஆணையாளருக்குப் புகார் செய்துள்ளது

கடந்த 2 மாதங்களாக 1 ம் வட்டாரம் தவிர்ந்த ஏனைய வட்டாரங்களில் வீதிகள், கடைகள், பொதுஸ்தாபனங்கள் ஆகியவற்றில் இரவு 6 மணி முதல் 9 மணிவரை மின்சாரம் வழங்கப்படாமையினால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர் என்று மேற்படி சங்கம் விசேட ஆணையாளருக்கு அனுப்பியுள்ள புகாரில் தெரிவித்துள்ளது.

இப்புகார் கடிதத்தின் பிரதிகள் உள்ளூராட்சி அமைச்சர், வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### ஆணையாளர் பதில்

மின்சார இயந்திர உதிரிப் பாகங்கள் பற்றாக்குறை காரணமாகவே மின்சாரம் தடைப்படுகின்றது என்றும் உதிரிப் பாகங்கள் கிடைக்கப்பெற்றதும் நிலைமை சீரடையும் என்றும் விசேட ஆணையாளர் வரியிறுப்போர் சங்கத்திற்கு இம் மாத முற்பகுதியில் பதில் எழுதியிருந்தபோதிலும் இதுவரை நிலைமை சீரடையவில்லை என்று வரியிறுப்பாளர் சங்கச் செயலாளர் திரு. ஐ. சரவணபவானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இம் மாதம் 24-ம் திகதி வவுனியா வரும் உள்ளூராட்சி உதவி அமைச்சர் திரு. டி. வி. இம்புலானவை மேற்படி சங்கப் பிரதிநிதிகள்சந்திக்க இருக்கின்றனர், (இ)

## அனுதை இல்ல சரஸ்வதி பூஜை

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி சிறுவர் அனுதை இல்லத்தில் நேற்று முன்தினம் யாழ்.லயன்ஸ்கழக ஆதரவில் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது.

இன்னிசை, வயலின் கச்சேரிகளும் இடம்பெற்றன. (இ)

## மறைக்கல்விவிழா

யாழ்ப்பாணம், சனி

இளவாலை புனித யாகப்பர் பங்கில் ஞாயிற்றுக்கிழமை மறைக்கல்வி விழா கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி அன்று விசேஷ திருப்பலியும், மாலை கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ)

## விவசாயிகள் பாதிப்பு

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதியில் தொடர்ந்து பெருமழை பெய்து வருவதனால் மானாவரி நெற் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பெரும்பாலான விவசாயிகள் இம்முறை நெல்லை விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ)

## தமிழ் இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மசோதா மீதான விவாதத்தின்போது கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்தியு பேசும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சிங்கள மக்களின் இரத்தத்தில் நீந்துவோம் எனப் பேசினார்கள் என்றும் வேறுபல குற்றச் சாட்டுகளையும் கூறினார். தேர்தல் காலத்தில் நாமோ அல்லது வேறு யாருமோ இப்படிப் பேசவில்லை. எனவே அவ்வாறு யார் பேசியது என்பதை அமைச்சர் திட்டவட்டமாக சபையில் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எதிர்க்கட்சித்தலைவரும் ஏனைய கூட்டணி எம். பிக்களும் இதனை வலியுறுத்தினர்.

நான் இங்கு கூறியது பத்தில் ஒரு பங்குதான் என்று அமைச்சர் மத்தியு கூறினார்.

பொறுப்புள்ள ஒரு அமைச்சர் இவ்வாறு பேசலாகாது. இவ்வாறு யார் பேசினார்கள் என்று சபையில் கூறவேண்டும் என்று கூட்டணியினர் கோரினர். இது தொடர்பான பத்திரங்களை சபையில் தாக்கல் செய்யும்படியும் கோரினர்

சபை அடுத்த மாதம் 1-ம் திகதி மீண்டும் கூடும். (ம)

## ஆட்சேபம்

முல்லைத்தீவு வெள்ளி

முல்லைத்தீவு சந்தைக்கு அருகே உள்ள பாதையை மறைத்து கடைகட்டப்படுவதை பொதுமக்கள் சார்பில் முல்லைத்தீவு வரியிறுப்போர் சங்கம் ஆட்சேபித்துள்ளது. சந்தைக்கு சைக்கிளில் விற்பனைப்பொருட்களைக் கொண்டு செல்பவர்களும் பொதுமக்களும் இப்பாதை மூடப்பட்டுள்ளதால் பெரிதும் சிரமத்திற்குள்ளாகின்றனர் என்றும் உடன் இக்கடை கட்டுவதை நிறுத்தி பாதையைத் திறந்துவிடுமாறும் மேற்படி சங்கம் பட்டினசபை விசேட ஆணையாளரைக் கோரியுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சர், உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் இதுபற்றி புகார் செய்யப்பட்டுள்ளது. (இ)

## வாள்வெட்டுக் கொலை

கொழும்பு, வெள்ளி

சகோதரரைச் சந்திக்கச் சென்ற பியதாஸ (வயது 40) என்ற நபர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் வாளால்வெட்டிக்கொல்லப்பட்டார்

இச்சம்பவம் கொலன்னை பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது. [உ]

---

கா யோகநாதன்

எழுதும்

'அகதிகள் முகாமில் ஒரு சந்திப்பு'

24-10-77 திங்கட்கிழமை தொடர்ந்து வெளிவரும்.

---

## 1 லட்சம் வீடுகள் கட்ட அரசு முடிவு

### பேரவையில் பிரேமதாச தகவல்

கொழும்பு, வெள்ளி

அடுத்த ஆண்டு 10 ஆயிரம் மாடிவீடுகள் கட்டப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

இத்தகவலை உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இன்றுதேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆறுவருட ஆட்சிக்காலத்தில் ஒரு லட்சம் வீடுகள் கட்டப்படுமென்றும் இவற்றில் 50 ஆயிரம் வீடுகள்கிராமப்புறங்களில் நிர்மாணிக்கப்படுமென்றும் திரு.பிரேமதாசாகூறினர்.

## நாடும் நடப்பும்

''தூங்காதே தம்பி தூங்காதே......'' என்ற 'நாடோடி மன்னன்' பாடலை தமிழ்நாடு கல்லூரிகளில் ஒலிபரப்புவதன் மூலம் அப்பாடலை அவர்களின் நினைவில் நிறுத்தவேண்டும் என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஒரு கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியுள்ளார்.

எம். ஜி. ஆரின் 'குமரிப் பெண்ணின் உள்ளத்திலே...' என்ற பாடலை அரச வீடமைப்புத் திட்டங்களிலும் 'தொட்டால் பூ மலரும் தொடாமல் நான் மலர்ந்தேன்......' என்ற பாடலை கலவன் பாடசாலைகளிலும் ஒலிபரப்பவேண்டும் என்று 'முரசொலி'யில் ஒரு ஹாஸ்யம் வெளியிடப்பட்டுள்ளது.

''தூங்காதே தம்பி'' பாடல் தமது சிந்தனையில்தான் எழுந்தது என்றும் அவர் படத்தில் வாயசைத்ததற்காக அது அவரின்பாடல்என்றுகருதிவிட முடியாது என்றும் அப்பாடலாசிரியரான மருதகாசி கூறியுள்ளாராம்.

சினிமாதான் இப்போது வாழ்க்கையாகிவிட்டதே! சினிமாப் பாடல்கள் ஒலிக்காத இடம் எங்கே இருக்கின்றது!

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தில் பண்ணைக்கு அருகேதான் இப்போது மீன் சந்தை, இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் அமைந்துள்ளன. இவற்றுக்கு மக்கள் சென்று வருவதில் பெரும் சிரமம் அடைகிறார்கள். அதுவும் மழைகாலமென்றால் சொல்லவேண்டியதில்லை.

பண்ணையில் ஒரு பஸ் நிலையம் அமைப்பதற்குத் திட்ட

4-ம் கலம் பார்க்க

5-ம் கலத் தொடர்ச்சி

மிடப்பட்டிருக்கிறது, இது ஒரு நல்ல திட்டம்.

இத்துடன் யாழ். நகரில் புதிய 'டவுண்பஸ்' சேவையொன்றை ஆரம்பிப்பது பெரும் உதவியாக இருக்கும்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து ஆரம்பித்து பண்ணை பஸ்நிலையம் சென்று கச்சேரிக்கும் அங்கிருந்து நல்லூர் முத்திரைச்சந்தை கல்வி அலுவலகம், நல்லூர் கல்யாண மண்டபம் ஆகிய பாதைகளால் சென்று இந்து மகளிர், இந்துக்கல்லூரி வழியாக யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்குச் சேரலாம்.

கால்மணி நேரத்துக்கு ஒரு சேவையாக இந்தச் சேவை ஏற்படுத்தி வேண்டுமானால் பச்சைவட்ட சேவை என்று பெயரும் சூட்டலாம்.

இந்த 'டவுண் சேவை' மூலம் பலருக்கும் பெரும உதவிசெய்யலாம்

- ஊர்சுற்றி

---

## மரண அறிவித்தல்

### மு. நா. அருளம்பலம்

பண்டத்தரிப்பு பிரபல வர்த்தகர் மு. நா. அருளம்பலம் காலமாகிவிட்டார். இவர், திருமதி இராசாத்தியின் கணவரும், நயினர், ராணி ஆகியவர்களின் தந்தையும், நல்லசேகரம், செல்லம்மா, காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி, இராசம்மா ஆகியவர்களின் சகோதரரும் ஆவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகப் பண்டத்தரிப்பு இல்லத்திலிருந்து விளாவெளி மயானத்திற்கு 22-10-77 (சனி) மாலை3 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

7476

---

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் செல்வத்தம்பி

பருத்தித்துறை தம்பசெட்டியைச் சேர்ந்த வழக்கறிஞர் மாணிக்கம் செல்வத்தம்பி காலமானார்; இவர் காந்திமதியின்கணவரும்,காலஞ்சென்றஇராசம்மா குமாரசாமி, தங்கம்மா சிவராசா,முத்துக்கிருஷ்ண (ஓய்வுபெற்ற அரசாங்க மில்முகாமையாளர்). டொக்டர் பெருமாள் பிள்ளை (பாங்கொக்), அருச்சுண (பிரதம தபால் நிலையம், கொழும்பு). காலஞ்சென்ற கப்பனை வழக்கறிஞர் இராமச்சந்திரன், மாணிக்கவாசகன் (டைம்ஸ் ஒப் சிலோன்), சிறீக்கந்தராசா (சட்டவரைஞர் திணைக்களம்), பத்மாவதி கதிர்காமத்தம்பி, நவரத்தினராசா (சந்தைப்படுத்தற் திணைக்களம்), தருமராசா (உணவுத் திணைக்களம்), ஆனந்தநடராசா (தொழில் திணைக்களம்), குலராசா (புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), துரைராசா (பேராதனை வளாகம்), கணேசராசா (சட்டக்கல்லூரி) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பொன்னம்மா பசுபதி, தையல்முத்து அந்தையா. வள்ளிப்பிள்ளை சதாசிவம், சிதேவி வல்லவராசா, தெய்வானை சபாபதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், வேலுப்பிள்ளை, அற்றன் வழக்கறிஞர் இளையதம்பி ஆகியோரின் சகோதரருமாவார்.

தகனக்கிரியைகள் இன்று (22-19-87) சனிக்கிழமை காலை பருத்தித்துறையில் நடைபெறும்.

6483

---

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனியாபிள்ளை பொன்னு தம்பாபிள்ளை

மாதகலைச் சேர்ந்த திருமதி அந்தோனியாபிள்ளை பொன்னு காலமாகிவிட்டார். இவர் தம்பிராசா (இளைப்பாறிய தபால் அதிபர்), சிங்கராசா (இளைப்பாறிய உப அதிபர் சென் ஜோசெப் கல்லூரி, மாதகல்), மார்ட்டின் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) ஆகியோரின் தாயாரும், ஸ்ரெலா, மார்ட்டினின் மாமியாரும் மார்ட்டின் எமில் மனோகரனின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (22-10-77) காலை 8-00 மணியளவில் மாதகல் அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலிக்குப்பின், சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

7469

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாருக்காக யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News papes in Sri Lanka